# ECO-COOL™

## குளிர்பதன டெக்னீஷியன்களுக்கான காலாண்டு இதழ்

வெளியீடு எண்.20 செப்டம்பர் 2007




UNEP NCCoPPக்காக UNEP உடனான ஒப்பந்தத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளடக்கம்


தலையங்கம் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 1

மாண்ட்ரியல் ஒப்பந்த செயல்படுத்துநர்களுக்கான விருதினை ஓசோன் செல் பெறுகிறது ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 1

NCCoPP, CFCயின் வெளியேற்றத்திற்குப் பங்களிக்கிறது. ... ... ... ... ... 1

மாண்ட்ரியல் ஒப்பந்தம் மற்றும் உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு. ... ... 2

டெக்னீஷியன்ஸ் பகுதி
- சரியான வாக்குவம் பம்ப்பின் முக்கியத்துவம். ... ... ... ... ... ... ... ... 2

ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதில் சுங்கத்துறையின் பங்கு... ... ... ... 3

மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் 20வது ஆண்டு நிறைவு ... ... ... ... ... ... ... 4

ஓசோன் படலத்திலிருந்து செய்திச் சிதறல்... ... ... ... ... ... ... ... ... ... ... ... 5

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் . ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 5

NCCoPPயின் செய்திச் சிதறல்கள்
– கருவி ஆதரவுத் திட்டம் (ESS) தற்போதைய நிலவரம் ... ... ... 6
– பயிற்சி பெற்ற டெக்னீஷியன்கள். ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 6
– NCCoPP RSE பயிற்சி நிகழ்ச்சிகள் அட்டவணை (2007-08) 6

பயிற்சி அளிக்கும் பார்ட்னர்கள் மற்றும் தொடர்பு எண்கள். ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 7


ஈக்கோகூல் என்ற வர்த்தக சின்னமானது ஆர்க்டிக் இண்டியா சேல்ஸின் தீபக் பாஹ்வாவிற்கு சொந்தமானது. இது உரிமத்தின் கீழ் பயன்படுத்தப்படுகிறது.



# தலையங்கம்

அன்பார்ந்த வாசகரே,

16 செப்டம்பர் 1987ல் கையெழுத்தான சர்வதேச அளவிலான மிகவும் வெற்றிகரமான ஒப்பந்தங்களில் ஒன்றான மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் 20வது ஆண்டு செப்டம்பர் 2007ல் நிறைவு பெறுகிறது. இந்த வெற்றிகரமான நிகழ்வு ஈக்கோகூலின் 20வது வெளியீட்டுடன் ஒன்றிணைவது குறிப்பிடத்தக்கது. ஈக்கோகூல், CFCயின் உபயோகத்தை முழுவதும் நிறுத்த இந்தியாவின் இறுதித்திட்டத்தில் (NCCoPP) ரெப்ரிஜிரேஷன் டெக்னீஷியன்களுக்கு தேவையான தகவல்களை அளிக்கும் ஒரே இதழாகும். ஈக்கோகூல் கடந்த பல ஆண்டுகளாக விழிப்புணர்வூட்டும் தொழில்நுட்பக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு நாட்டிலிருந்து CFCயின் உபயோகத்தை முழுமையாக நீக்கப் பல விபரங்களை அளித்து வருகிறது. இனி வரும் காலங்களில் இந்தச் சேவையைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் இருக்கிறது.

இது மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் மீதான சிறப்பு வெளியீடாதலால், இந்த ஒப்பந்தம், அது உருவான விதம் மற்றும் கடந்த ஆண்டுகளில் இது செய்த சாதனைகள் போன்ற பலவற்றை இந்த இதழில் நாம் காண உள்ளோம். இந்த 20வது ஆண்டு நிறைவில் இந்தியாவை முன்னிறுத்தி இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளவிருக்கும் பல்வேறு நடவடிக்கைகளையும் நாம் பார்க்க உள்ளோம்.

இன்று, ஓசோன் படலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற விஷயத்துடன் உலகளவில் வெப்பம் அதிகரிப்பதும் சுற்றுச்சூழல் விஷயத்தில் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் முக்கிய சாராம்சமே ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமின்றி உலக அளவில் வெப்பம் அதிகரிப்பதற்கு காரணமான பசுமை வாயுக்களை குறைப்பதற்கும் இது உதவியுள்ளது. மாண்ட்ரியல் ஒப்பந்தம் மற்றும் ஓசோன் படலத்தை பாதுகாத்தல் குறித்த விளக்கமான விபரங்களை இனி பார்ப்போம்.

ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் விதத்தில் இந்திய சுங்கத் துறையின் பங்குப்பணியும் மிகவும் முக்கியமானது. இது குறித்த கட்டுரையை இதழில் காணலாம்.

டெக்னிஷியன்களின் சந்தேகங்களுக்குத் தீர்வளிக்கும் விதத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு வழங்கப்பட்டுள்ளது. இது சர்வீஸுக்கான வழிமுறைகள் மீதான குறிப்புகளை வழங்குகிறது. வழக்கமாக, NCCoPP மற்றும் அதன் நடவடிக்கைகள் மீதான சுருக்கமான விபரங்களும் இதில் இடம் பெறுகின்றன. ஓசோன் செய்திச் சிறதல் பிரிவானது சிதைக்கும் ஹாலோன்களுக்கு பதிலாக புதிய தீயணைப்பு லகத்தைக் குறித்து தகவல்களை வழங்குகிறது.

மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் 20வது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டம் நடைபெறும் இத்தருணத்தில் CFCயின் உபயோகத்தை முற்றிலும் நீக்கும் விதத்தில் உலகின் குறிப்பாக இந்தியாவின் முயற்சிகளுக்கு ஈக்கோகூல் பாராட்டுதல்களை அளிக்கிறது.

*தொடர்பு கொள்க: மனிஷா டோலியா*
*ஈமெயில்: md@itpi.co.in*



# மாண்ட்ரியல் ஒப்பந்தச் செயல்படுத்துனர்களுக்கான விருதினை ஓசோன் செல் பெறுகிறது




மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் 20வது ஆண்டு நிறைவினையொட்டி, அந்த ஒப்பந்தத்தினை சிறப்பான விதத்தில் செயல்படுத்தியதற்காக இந்தியாவின் ஓசோன் செல் விருதினைப் பெறுகிறது. இவ்விருதானது மாண்ட்ரியல் 17 செப்டம்பர் 2007, திங்கட்கிழமையன்று வழங்கப்பட்டது. ஓசோன் வெளியேற்ற செயலாக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட முக்கிய பங்கேற்பாளர்களின் பங்குப் பணியை அங்கீகரிக்கும் விதத்தில் வாய்ப்பினைப் பெற்றதற்கான மகிழ்ச்சியை தெரிவிக்கும் வேளையில் ஓசோன் தலைமையகமானது, ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் விதத்தில் செயல்பட்ட இந்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் (MOEF) ஓசோன்செல்லுக்கு விருதளித்து கௌரவப்படுத்தியது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் ஓசோன் செல் ஆனது மாண்ட்ரியல் ஒப்பந்தத்தை இந்தியாவில் நிர்வகித்து ஒருங்கிணைத்துசெயல்படுத்தும் விதத்தில் இயங்கும் ஒரு பிரத்யேக தலைமையகமாகும். அதுமட்டுமின்றி, மாண்ட்ரியல் ஒப்பந்தத்தினைக் குறித்து கொள்கை நடவடிக்கைகளை வடிவமைத்து, கண்காணித்து, ஒருங்கிணைக்க இந்திய அரசால் நிறுவப்பட்ட பல்வேறு சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் உள்ள வழிகாட்டல் கமிட்டியின் செயலகமாகவும் செயல்படுகிறது. இந்தப் பங்கேற்பாளர்களில் பல்வேறு அமைச்சகங்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஏஜென்சிக்களும் அடங்குவர்.

ஓசோன் செல், தொழிலக மற்றும் வர்த்தகம் சங்கங்கள் வழியாக ஓர் அர்த்தமுள்ள கொள்கை மற்றும் முடிவெடுக்கும் செயலாக்கங்களின்படி தனியார் துறையுடன் நீடித்த கூட்டாண்மையைப் பெற்றுள்ளது. ODSஐ நீக்கும் நடவடிக்கைகள் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த அதன் சம்பந்தம் ஆகியவற்றை சிறப்பித்துக்காட்டி பொதுமக்களுக்கோர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நீடித்த அளவில் ஓசோன் செல் ஏற்பாடு செய்து நடைமுறைபடுத்தியுள்ளது. ஓசோன் செல் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்ட விபரங்களைக் கொண்ட இணையதளத்தையும் கொண்டுள்ளது. இதிலிருந்து தகவல்களையும் வெளியீடுகளையும் ஒருவர் தகவலிறக்கம் செய்து கொள்ள முடியும்.

***தொடர்பு கொள்க : ஓசோன் செல்,***
***MOEF, இந்தியா***

# CFC உபயோக நீக்கத்தில் NCCoPPயின் பங்கு

NCCoPP CFCக்களின் பயன்பாட்டினை RAC சர்வீஸ் துறையில் 2010க்குள் நீக்குவதில் கீழ்க்கண்ட வழிமுறைகளின் வழியாக தனது பங்களிப்பை வழங்குகிறது.

- CFC அடிப்படையிலான RAC சர்வீஸிங் துறை நிறுவனங்களை இலக்காகக் கொள்வது.
- CFC அடிப்படையிலான சாதனங்களுக்கான சிறந்த சர்வீஸிங் வழிமுறைகளை ஊக்குவிப்பது.
- புதிய CFC சாரா தொழில்நுட்பங்களைக் கையாளுவதில் சர்வீஸிங் துறை டெக்னீஷியன்களுக்குப் பயிற்சியை அளித்தல்.

2004-2009 வரை திட்டமிடப்பட்டுள்ள NCCoPP 2 நாள் நடைமுறை பயிற்சி நிகழ்ச்சிகளில் உள்ளடங்கியவை:

- CFC மற்றும் ODS பயன்பாட்டு நீக்க செயலாக்க முறைகள்
- ரெட்ரோஃபிட்டிங் உட்பட புதிய HFC-134a மற்றும் HC அடிப்படையிலான ரெப்ரிஜிரேட்டர்கள் மற்றும் இதர வர்த்தக சாதனங்களைச் சர்வீஸ் செய்தல்.
- CFC ரெப்ரிஜிரெண்ட்களை "ரெகவரி மற்றும் ரீக்ளமேஷன்" (R&R) செய்தல்.
- தொழில்நுட்பம் மற்றும் சந்தை மாற்றங்கள், தக்க உபகரணங்கள்/கருவிகள் குறித்த நிலவரங்கள்
- மொபைல் ஏர் கண்டிஷனர்களை (MAC) சர்வீஸ் செய்வதில் சிறந்த வழிமுறைகள்
- ஓப்பன் வகை கம்ப்ரசர்களை (OTC) பயன்படுத்தும் மிகப் பெரிய வர்த்தகச் சாதனங்களுக்கான சிறந்த சர்வீஸிங் வழிமுறைகள் மற்றும் அதற்கான ரெட்ரோஃபிட்டிங், மற்றும் ரெட்ரோ வழிமுறைகளுக்கான மறு ஆய்வு.

இந்தப் பயிற்சிக்கு அனைத்து வீட்டு உபயோக மற்றும் வர்த்தக ரெப்ரிஜிரேஷன் சர்வீஸிங் நிறுவனங்களும் விண்ணப்பிக்கலாம். MAC சர்வீஸ் நிறுவனங்களுக்கு 1 நாள் பிரத்யேக பயிலரங்கம் நடத்தப்படும். பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொடர்புகள் குறித்த அட்டவணைக்கு 6 - 7 பக்கங்களைப் பார்க்கவும்.






CFCs WILL NOT BE AVAILABLE IN INDIA FROM 2010 CFCs WILL NOT BE AVAILABLE IN INDIA FROM 2010

# மாண்ட்ரியல் ஒப்பந்தம் மற்றும் உலகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு




மாண்ட்ரியல் ஒப்பந்தம் இந்த ஆண்டு அதன் 20வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுகிறது. இந்தப் பன்முகச் சுற்றுச்சூழல் ஒப்பந்தமானது வெற்றிகரமான ஓர் ஒப்பந்தமாகப் பரவலான அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களைத் தயாரிப்பது (ODS) சில தீவிர பயன்பாடுகள் தவிர 2010க்குள் முடிவு பெற்று விடும். இந்த ஒப்பந்தம் இல்லையெனில் ODSகளின் அளவு இன்றுள்ள நிலையை விட ஐந்து மடங்கு அதிகமாக இருக்கும். அது மட்டுமின்றி, பூமியின் வடக்குப் பகுதியின் மத்திய இடங்களில் UV-B கதிரியக்க அளவுகள் இரட்டிப்பாக ஆகியிருக்கும். ஆகவே, மாண்ட்ரியல் ஒப்பந்தம் பலரைக் காப்பாற்றியுள்ளது என்றே சொல்ல வேண்டும். இல்லையெனில், அவர்கள் சருமப் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பார்கள். தற்போதுள்ள மதிப்பீட்டின்படி, ஓசோன் படலத்தில் உள்ள ஓசோன் அளவானது 1980ஆம் ஆண்டிற்கு முன்பு உள்ளபடி 2049 ஆம் ஆண்டுகளில் மீண்டும் உருவாகும் என்றும், அண்டார்டிக் மண்டல துவாரமானது 2065க்குள் மறைந்துவிடும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. உலக தட்பவெப்பச் சூழலுக்கு மாண்ட்ரியல் ஒப்பந்தம் கணிசமான அளவு பங்கு பணியாற்றுள்ளது என்ற உண்மையை யாரும் உணரவில்லை. பெரும்பான்மையான ODSகள் மிகவும் சக்தி வாய்ந்த க்ரீன் ஹவுஸ் வாயுக்கள் ஆகும். மேலும், இவை தட்பவெப்ப மாற்றத்திற்குப் பெரிதும் காரணமாக இருக்கின்றன.

CFC-12ன் உலக சூடேற்றும் ஆற்றல் (GWP) கார்பன்டைஆக்ஸைடின் ($CO_2$) GWPஐ விட 8500 மடங்கு அதிகமானது.

அமெரிக்காவின்[1] நேஷனல் அகாடமி ஆஃப் சயின்சஸ் என்ற அமைப்பு மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் ODSகள் நீக்கத்தின் வழியாக $CO_2$ வெளியேற்றம் குறைக்கப்பட்டதை தட்பவெப்பநிலை மாற்றத்தின் மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (UNFCCC) கியோட்டோ ஒப்பந்தத்தின் இலக்குகளுக்கு ஒப்பிட்டுள்ளது. தட்பவெப்ப மாற்றங்களின் மீதான சர்வதேச உடன்படிக்கையில் செய்யப்பட்டுள்ள இந்தத் திருத்தமானது கையொப்பமிட்ட நாடுகளில் 2008 ஆம் ஆண்டு முதல் 2012க்குள் (முதல் பொறுப்பு காலம்) 1990 ஆம் ஆண்டின் 6 முக்கிய க்ரீன் ஹவுஸ் வாயுக்களை[2] ஒப்பிடும்போது 5.2% ஆக குறைக்கும் இலக்கைக் கொண்டுள்ளது. மாண்ட்ரியல் ஒப்பந்தத்தில் நடைமுறைப்படுத்தியதன் காரணமாக GWP வெளியிட்ட ODS வெளியேற்றத்தின் குறைப்பானது 2010 ஆம் ஆண்டு வரை க்யோட்டோ ஒப்பந்தத்தின் முதல் பொறுப்பு காலத்தின் இலக்கை விட குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகமாக இருக்கும் என ஆய்வில் கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது மீதமுள்ள பொருட்களைக், குறிப்பாக ஹைட்ரோ க்ளோரோ ஃப்ளுரோ கார்பன்களை (HCFCக்கள்) படிப்படியாக உபயோகிப்பதை குறைத்து ஓசோன் மற்றும் தட்பவெப்ப நிலை பாதுகாப்பை எவ்விதம் மேலும் மாண்ட்ரியல் ஒப்பந்தம் பேணப் போகிறது என்பது பரவலாக இப்போது விவாதிக்கப்படுகிறது. இந்த ஹைட்ரோ க்ளோரோஃப்ளுரோ கார்பன்கள் தற்போதுள்ள நிலையின்படி 2015 ஆம் ஆண்டு உறையவைக்கப்பட்டு 2040 ஆம் ஆண்டில் மட்டுமே வெளியேற்றப்படும். HDFCக்களில் (ஏர்கண்டிஷனிங் மற்றும் ஃபோம் விரிவாக்கம் ஆகியவற்றில் ரெப்ரிஜிரெண்டாகப் பயன்படுத்தப்படுகிறது) ODP மதிப்புகள் சற்றே குறைவாக உள்ளது. ஆனால், இந்த பொருட்கள் கணிசமான GWP மதிப்புகளை பெற்றுள்ளது. சாதாரணமாக, HCFCக்களுக்கு பதில் பயன்படுத்தப்படும் ODS அல்லாத மாற்று சாதனங்களாக ஹைட்ரோஃப்ளுரோ கார்பன்கள் (HFCக்கள்) உள்ளன. இவை HCFCக்களை ஒப்பிடும் போது ஒரே மாதிரியான அல்லது அதைவிட அதிகமான GWPஐக் கொண்டுள்ளன.

ஆகவே, மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின்கீழ் HCFCன் உபயோகம் விரைவாக நிறுத்தப்படுவதால் இது ஓசோன் படலத்திற்கும் உலகளாவிய தட்பவெப்ப நிலைக்கும் பலனளிப்பதோடு குறைவான GWP க்கு பதில் ஹைட்ரோகார்பன்களின் உபயோகத்திற்கும் போதுமான ஊக்கப்பலன்களை அளிக்க வேண்டும். இருப்பினும், தற்போதுள்ள பயன்பாடுகளுக்குக் குறைவான GWP மாற்றினைக் கொண்ட HCFCக்களை மாற்றி உபயோகிக்கும் தக்க தொழில்நுட்பம் இன்னும் கிடைக்கவில்லை. புதிய GWPகுறைவான தயாரிப்புகள் மொபைல் ஏர்கண்டிஷனிங் துறையில் HFC 134aக்கு பதிலாக சந்தையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவை கூடிய விரைவில் இதரப் பயன்பாடுகளுக்கும் சந்தையில் உபயோகிக்கும் நிலை வந்துவிடும். இந்த விஷயத்தில் அவ்வப்போதைய நிலவரங்களை நாங்கள் உங்களுக்கு அளித்து கொண்டேயிருப்போம்.

***தொடர்பு கொள்க: மார்க்கஸ் வைப்பியர்***
***ஈமெயில்: markus.wypior@proktima.org***

---

(1) கஸ் J.M. வெல்டர்ஸ், ஸ்டீபன் O. ஆன்டர்சன், ஜான் S டானியல், டேவிட் W ஃபாஹி மற்றும் மேக் மேக்ஃபர்லாண்ட். தட்பவெப்ப நிலையைப் பாதுகாக்கும் விதத்தில் மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் அமெரிக்காவின் நேஷனல் அகாடமி ஆஃப் சயின்சஸின் நடவடிக்கைகள் (2007), www.prias.org.

(2) $CO_2$, $CH_4$, N2O, HFC, PFC மற்றும் $SF_6$.

# டெக்னீஷியன்ஸ் பகுதி
# சரியான வாக்குவம் பம்ப்பின் முக்கியத்துவம்

ஒரு சரியான வாக்குவம் பம்ப்-ஐ பயன்படுத்துவதிலான முக்கியத்துவமானது NCCoPP பயிற்சி நிகழ்ச்சியில் விளக்கிக் காட்டப்பட்டது. ஒரு சரியான வாக்குவம் பம்ப் எவ்விதம் ஈரப்பதத்தை நீக்க உதவுகிறது என்பதைப் பயிற்சியாளர் விளக்கிக் காண்பிப்பதை படத்தில் நீங்கள் பார்க்கலாம். பயிற்சியாளர் வாக்குவம் பம்ப் உடன் தண்ணீர் உள்ள ஒரு பாட்டிலை இணைத்தார். இந்தத் தண்ணீர் ஆவியாக மாறி எவ்விதம் வாக்குவம் பம்ப்பினால் முழுவதும் பாட்டிலிருந்து எடுக்கப்படுகிறது என்பதை விளக்குவதே இதன் நோக்கமாகும். வாக்குவம் பம்ப் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டேயிருக்கும் போதே எவ்விதம் பாட்டிலில் உள்ள தண்ணீர் சிறிது சிறிதாகக் குறைந்து கடைசியில் மறைகிறது என்பதைப் பயிற்சி பெறுபவர்கள் கவனித்தார்கள். இதன் வழியாக வாக்குவம் பம்பினால் உருவாக்கப்படும் குறைவான அழுத்தம் அல்லது வெற்றிடம் காரணமாகத் தண்ணீர் நீராவியாக மாறுகிறது என்பது தெரிகிறது. ரெப்ரிஜிரேஷனில் பாட்டிலுக்குப் பதில் ரெப்ரிஜிரேஷன் சிஸ்டம் பயன்படுத்தப்படுகிறது. ரெப்ரிஜிரேஷனின் கம்ப்ரசர், எவாப்பரேட்டர், கன்டென்சர் போன்ற பல்வேறு பாகங்களில் நீர்த்துளிகள் உள்ளன. நீர்த்துளிகள் சாதனத்திற்குள் இருந்தால் சாதனத்திற்கு மிகவும் கேடு விளைவிக்க கூடியது. ஆகவே, இதை வாக்குவம் பம்ப்பினால், நன்கு வெற்றிடத்தை உருவாக்கி திறம்பட வெளியில் எடுக்கப்பட வேண்டும். பயிற்சி பெறுநர்கள் கண்கூடாகவே நீர்த்துளிகள் மறைந்துபோவதைப் பார்ப்பதால் ரெப்ரிஜிரேஷனில் வாக்குவம் பம்ப்பின் முக்கிய பங்கினை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள்.




இது ராஜஸ்தான் பயிற்சி செல் தயாரித்த ஒரு நல்ல, வியப்பூட்டும் புதுமை சாதனமாகும். இதை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.






CFCs WILL NOT BE AVAILABLE IN INDIA FROM 2010
CFCs WILL NOT BE AVAILABLE IN INDIA FROM 2010

# ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதில் சுங்கத்துறையின் பங்கு




ஓசோனைச் சிதைக்கும் பொருட்களைக் குறிப்பாக CFCகளை, தயாரிப்பதிலும் பயன்படுத்துவதிலும் இந்தியா முனைந்து ஈடுபடுகிறது. இந்தியாவிலிருந்து USக்கு சட்டத்திற்கு புறம்பாக ODS-ஐ கடத்துவது 1990 ஆம் ஆண்டு முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைய அளவில் இந்தியாவிற்குள் சட்டத்திற்கு புறம்பான விதத்தில் ODS இறக்குமதியும் நிகழ்கின்றன. சட்டத்திற்கு புறம்பான இந்த ODS இறக்குமதியில் பங்களாதேஷ் மற்றும் நேபாள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. நேபாளுடன் இந்தியாவிற்குள்ள எளிமையான சுங்க வழிமுறைகள் இவ்வகையிலான ODSன் சட்டத்திற்கு புறம்பாக இறக்குமதி செய்யப்படுவதில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. பிர் கான்ஜ் மற்றும் பிராட் நகர் ஆகிய இடங்களில் கடத்தலுக்கான வழிகள் உள்ளன. இந்தியாவில் பறிமுதல் செய்யப்பட்ட சட்டத்திற்கு புறம்பான பொருட்கள் துபாய் மற்றும் சிங்கப்பூரில் இருந்து வந்துள்ளன. துபாயில் இறக்குமதி செய்யப்படும் 60%க்கும் மேற்பட்ட CFC மீண்டும் சட்டபூர்வமாகவோ சட்டத்திற்குப் புறம்பாகவோ ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியா மற்றும் இதர சந்தைகளுக்கு மாண்ட்ரியல் ஒப்பந்த உரிமை முறையின்படி அல்லாமல் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. துபாய் எக்ஸ்போர்ட் ஃப்ரீ ஜோன், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்குள் செல்லும் சட்டத்திற்கு புறம்பான ODSக்கு ஓர் நுழைவாயிலாக உள்ளது. ஆர்டிகிள் 5 நாடுகளில் கள்ள கடத்தலைத் தடுத்து நிறுத்துவது மிகவும் கடினமான செயலாகவே உள்ளது. ஏனெனில், அந்த நாடுகளில்தான் மொத்தமாக தயாரிப்பும் பயனீடும் நிகழ்கின்றன. இந்த நாடுகளில் ODSஐ குறித்த கால இடைவெளிகளில் நீக்கும் செயல் இன்னும் முடிவுறவில்லை.

இந்தியா, மாண்ட்ரியல் ஒப்பந்தம் மற்றும் அதன் லண்டன் திருத்தம் ஆகியவற்றில் 17 செப்டம்பர் 1992லிருந்தே உறுப்பினராக உள்ளதால், ODS பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதையும் அதனைக் கட்டுப்படுத்தவும், அதன் தயாரிப்பை நிறுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது, இவை சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் ஓசோன் செல்லின் ஒதுக்கீட்டின்படியும் உரிமத்தின் கீழும் ஏற்றுமதியோ/இறக்குமதியோ செய்யப்படவேண்டும். சமீபத்தில் இவை சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் ஓசோன் செல்லால் ஒதுக்கீடு செய்யப்பட்ட விதத்தில் உரிமத்தின் பேரில் ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்துகொள்ளலாம். இத்தயாரிப்புகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு புறம்பான கடத்தல்கள் இந்திய நேபாள எல்லையிலும் இந்தியா-பங்களாதேஷ் எல்லையிலும், மற்றும் முக்கிய சுங்கப்பிரிவுகளிலும் ICDக்களிலும் பறிமுதல் செய்யப்பட்டது வெளியாகியுள்ளது. அறிக்கையின்றியும் சீட்டுக்கள் இன்றியும் கடத்தப்படும் இவற்றை அடையாளம் காண்பது மிகவும் கடினமானது. இவற்றை மிவும் பிரத்யேகமான உபகரணங்கள் வழியாக அறிவியல் பூர்வமாக அடையாளம் காணப்படவேண்டும். இந்த உபகரணங்கள் பல்வேறு சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகப்பட்டு வருகிறது.

மாண்ட்ரியல் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் ஓசோன் செல் நியமிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ODS உபயோகத்தைப் படிப்படியாக குறைத்து நீக்குவதில் பல நிதி சம்பந்தமான மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது. ODSன் உபயோகத்தை நீக்கும் திட்டத்திற்குத் தேவையான பொருட்களுக்கும் ODS சாரா தொழில்நுட்பத்தின்படி தொழிலகங்களில் மாற்றுப் பொருட்களுக்கான முதலீட்டிற்கும் சுங்க மற்றும் எக்ஸைஸ் தீர்வை சலுகை அளிக்கப்பட்டுள்ளது. ODS தொழில்நுட்பத்துடன் கூடிய எந்த நிறுவனத்திற்கும் நிதியுதவி அளிக்கக் கூடாது என வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவுகளை வழங்கியுள்ளது. ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நிறுவனங்களுடன் ODS வர்த்தகத்தை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை வாரியம் இந்த நிதி சம்பந்தமான மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுப்பதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது. CBECன் பயிற்றுவிக்கும் நிறுவனமான NACEN சுமார் 50,000 அதிகாரிகளுக்கு திறன்களை அளிப்பதில் ஈடுபட்டுவருகிறது. இந்தியா ஆர்ட்டிகிள் 5 நாடுகளில் ஒன்றாக இருப்பதால், மாண்ட்ரியல் ஒப்பந்தத்தை கட்டுப்படுத்தி கண்காணிப்பதிலான ஆதாரமையமாக UNEPஆல் NACEN அடையாளம் காணப்பட்டுள்ளது. UNEP மற்றும் NACEN ஆகியவற்றிற்கிடையிலான செயல்பாடானது UNEPன் தெற்கு-தெற்கு கூட்டுறவு முயற்சியின் ஓர் அங்கமாகும். பிரஸ்ஸல்ஸில் உள்ள உலக சுங்க நிறுவனத்துடன் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கும் UNEP ஆனது இந்தியாவில் மட்டுமின்றி ஆசியபசிபிக் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் சுங்கத் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்ட NACEN போன்ற நிறுவனங்களின் வழியாக சுற்றுச்சூழல் குற்றங்களை கட்டுப்படுத்தலாம் என உறுதியுடன் நம்புகிறது. அதன்படி, ODSஐ இனம் கண்டு, சட்டத்திற்கு புறம்பான அதன் நடவடிக்கைகளை கண்டறியும் விதத்தில் சுங்கத்துறை மற்றும் அமலாக்க அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதை NACEN முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

ODSஐப் பற்றிய போதிய அறிவு மற்றும் அதன் கடத்தல் பற்றிய தகவல்களைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு இயக்கத்தினை NACEN மேற்கொண்டு செயல்படுத்துகிறது. இது சம்பந்தமாக பல்வேறு திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளதோடு பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்தத் துறையில் பயிற்சி பெற்ற பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் நாடு முழுவதிலும் அதிக எண்ணிக்கையிலான பயிற்சி அமர்வுகளை நடத்தியுள்ளனர். மிகவும் பரந்த வீச்சினைக் கொண்ட பசுமை சுங்கத்துறை என்ற பயிலரங்கதிட்டமும் NACENஆல் நடத்தப்பட்டுவருகிறது.

2005-06ஆல் NACEN 28 பயிலரங்கங்களை நடத்தியது - இதில் நாடு முழுவதும் 333 அதிகாரிகள் பங்கேற்று (குரூப் Aல் 144; Bல் 121; Cல் 68) பயிற்சியைப் பெற்றள்ளனர். இதில் காவல்துறை, சுங்கத்துறை, எல்லை பாதுகாப்புப் படை, இந்திய கரையோர பாதுகாப்புப்படை, மற்றும் அந்நிய வர்த்தக தலைமை இயக்ககம் ஆகிய துறைகளிலிருந்தும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

UNEPஆல் பயிற்றுவிக்கப்பட்ட NACEN பயிற்றுநர்கள் DPR கொரியா, மாலத்தீவுகள், பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெற்ற பயிற்றுநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றனர். இனி வரும் ஆண்டுகளில் குரூப் A செயலாக்க அதிகாரிகளுக்கு நேரடி பயிற்சியைத் தவிர இ-லெர்னிங் பயிற்சியும் வழங்கப்பட உள்ளது. இதனால் பல எண்ணிக்கையிலான அதிகாரிகளுக்குப் பயிற்சி சென்றடைய முடியும்.

"பயிற்சி எங்கும் எப்பொழுதும்" என்று இந்தப் பயிற்சி நிகழ்ச்சியானது அழைக்கப்படுகிறது. பலனடையும் அதிகாரிகளுக்கான TRANCHE II நிகழ்ச்சியின் கீழ் 22 & 23 நவம்பர் 2006 ஆகிய நாட்களில் நேர்முகப் பயிற்சி பயிலரங்கமானது கொச்சியில் நடைபெற்றது. இதுபோன்ற பல பயிற்சி நிகழ்ச்சிகள் இனி வரும் மாதங்களிலும் நடைபெற உள்ளன.

ஆசிய பசிபிக் மண்டலத்தில் வளரும் நாடுகளில் முதன்மையான மையமாக கருதப்படும் க்ரீன் கஸ்டம்ஸ் என்ற மையத்திற்கு ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட NACEN-ஐ UNEP முன்மொழிந்துள்ளது. இந்த ஒருங்கிணைப்பு மையமானது ODS உட்பட்ட பல்வேறு சுற்றுச்சூழல் விஷயங்களுக்கான மாநாடுகளில் ஆய்வு, பகுத்தாய்வு மற்றும் திறன் கட்டமைப்பு ஆகியவற்றை முதன்மையாக மேற்கொள்ளும்.இந்த ஒப்பந்தமானது குறிப்பாக பன்முகச் சுற்றுச்சூழல் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில் சுங்க அதிகாரிகளுக்கு பயிற்சியை அளித்து அவர்கள் விழிப்புணர்வை மேம்படுத்தி எல்லையோர பகுதிகளில் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைநடவடிக்கைகளைசெயலாக்கப்படுத்துவதை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. ஆக, இதன் மைய நடவடிக்கைகளில் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட குற்றங்களைத் தடுத்தல் போன்றவையும் உள்ளடங்கும். உலகளவில் இயற்கை மற்றும் இயற்கை வளங்களை பேணுதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் அதற்கு ஆதரவு அளித்தல் தொடர்பாக பகிரப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றால் முன்னேற்றம் காண UNEP மற்றும் NACEN ஆகியவற்றிற்கிடையில் ஒரு கூட்டு முயற்சிக்கான புரிதலை ஏற்படுத்த இந்த மையமானது வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் நாடுகளிலுள்ள ஒருங்கிணைப்பாளர்களிடம் திறன் கட்டமைப்பு மற்றும் பயிற்சி அணுகுமுறைகள் குறித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் பகுத்தாய்வு உபகரணங்கள் உருவாக்கவும் முனைந்து செயல்படும். இந்த மையமானது, குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் திட்டங்களை வடிவமைத்துப் பரிசோதனை செய்து, நடைமுறைப்படுத்தி அதன் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதிலான UNEPன் அறிவியல்பூர்வமான நடைமுறைக்கு ஏதுவான ஆதரவை அளித்து உதவும்.

சுருக்கமாகச் சொன்னால், NACEN அதிகமான பொறுப்புகளுடன் மிகவும் உன்னதமான காலங்களை எதிர்நோக்கி ஆவலுடன் செயல்பட்டு வருகிறது.

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க:*
*Ms.லூட்கார்ட் காப்பன்ஸ்,*
*ஈமெயில் : coppens@un.org*
*அல்லது தலைமை இயக்குநர், NACEN*
*ஈமெயில் : adgnacen@gmail.com*

# மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின் 20ஆவது ஆண்டுவிழா

இந்த 2007ஆம் ஆண்டுடன் மாண்ட்ரியல் ஒப்பந்தம் கையெழுத்தான 20ஆவது ஆண்டு நிறைவாகிறது. மிகவும் வெற்றிகரமான பன்முகச் சுற்றுச்சூழல் ஒப்பந்தங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. மனிதகுலத்தைச் சுற்றுச்சூழல் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முதல் ஒப்பந்தமாக மாண்ட்ரியல் ஒப்பந்தம் கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்ட விதம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, இதில் ஆய்வு முடிவுகள் முக்கிய அங்கமாகக் கருதப்படுகின்றன. இந்த ஒப்பந்தத்தில் ஓசோனை சிதைக்கும் பொருட்களின் மீதான முடிவுகளை எடுப்பதற்கு 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிவியல் கணிப்பீடுகள் அடிப்படை அளவுகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

**ஸ்ட்ரேட்டோ மண்டலத்தில் ஓசோன் நிலை குறித்த முதற்கட்ட ஆய்வு - வரலாறு**

ஓசோன் படலத்தின்மீதான ஆய்வானது 1930களிலேயே துவங்கிவிட்டது. 1970களில் ஸ்ட்ரேட்டோ மண்டலத்தில் செல்லும் விமான போக்குவரத்தால் ஓசோன் படலம் பாதிப்படையக் கூடும் என்ற கவலை இருந்தது. இந்தத் தருணத்தில்தான் ஓசோன் படல சிதைவிற்கு குளோரோஃப்ளூரோ கார்பனின் பங்கு முக்கியமானது என்ற ஓர் எண்ணம் முன்வைக்கப்பட்டது. அந்தத் தருணங்களில் CFC க்கள் ரெஃப்ரிஜிரேஷன், ஏரோசால்கேன்கள் மற்றும் சில தொழிலக செயலாக்கங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் பலர் இந்த கருத்துக்கு ஆட்சேபங்களைத் தெரிவித்தனர். ஆனால், பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் கண்காணிப்புத் திட்டங்களும் CFC க்கு இதில் பெரும்பங்கு உண்டு என்பதை அறிவியல் சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டியது.

**உலக அளவில் முயற்சிகள் துவக்கம்**

1977ஆம் ஆண்டு, ஓசோன் படலம் மீதான ஒருங்கிணைப்புக் குழுவை ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் நிகழ்ச்சி (UNEP) நிறுவியது. UNEPயின் நிர்வாகக் குழு ஓசோன் படலத்தின் மீதான உலகத்திட்டத்தைத் தழுவியது. 1970ஆம் ஆண்டின் பின்பகுதியில் மற்றும் 1980ன் முற்பகுதியில், அமெரிக்கா, கனடா மற்றும் ஸ்கேண்டிநேவியன் நாடுகள் உட்பட்ட சில தேசிய அரசாங்கங்கள், வியர்வை அகற்றி, ஹேர்ஸ்ப்ரேக்கள் மற்றும் டியோடரண்ட்கள் ஆகிய அவசியமற்ற ஏரோசால் ப்ரொபெல்லண்ட்களில் CFCகளின் உபயோகத்தைத் தடை செய்தது. 1981ல், கனடா தலைமையில் சட்ட நிபுணர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட செயல்திட்டத்தின்படி ஒரு உலகளாவிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த UNEP முடிவுசெய்தது. ஸ்வீடன் நாடானது, நார்வே, ஃபின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த முயற்சியை மேற்கொண்டு முதல் ஒப்பந்தத்தை சர்வதேச சமுதாயத்திற்கு 1981ல் வழங்கியது. ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்துவது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. விஷயத்தின் வீச்சைப் புரிந்துகொள்ளாத ஒரு நிலையும் இதற்குக் காரணமாக இருந்தது. சில பயமுறுத்தல்களும் எழுந்தன. அறிவியல் பூர்வமான நிரூபணத்தைச் சந்தேகிக்கும் வகையில் பல கேள்விகள் எழுந்தன. இந்தச் சவாலை எதிர்கொள்ள போதுமான தொழில்நுட்பத்திறன் இல்லை என்ற கருத்தும் பலருக்கு இருந்தது.




**திட்டவரம்பு**

1985ஆம் ஆண்டு ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்காக வியன்னா உடன்படிக்கை கையெழுத்தானது. ஓசோன் படலத்தின் சிதைவினால் ஏற்படும் பாதிப்பான விளைவுகளுக்கு எதிராக மனித ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதற்கான நாடுகளின் பொறுப்புகளை வகிக்கும் வியன்னா உடன்படிக்கையானது மாண்ட்ரியல் ஒப்பந்தம் உருவாவதற்கான திட்டவரம்பினை நிறுவியது. இந்தத் திட்ட வரம்பு ஒப்பந்தத்தை முதலில் கனடா ஆமோதித்தது. அந்தச் சமயத்தில் 9 நாடுகள் குறிப்பிட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு சம்மதம் தெரிவிக்க இயலாத நிலையில் இருந்தனர். இருப்பினும், ஸ்வீடன் முன்மொழிந்த தீர்மானமானது எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனால் அனைத்து தரப்பினரும் இனிவரும் 2 ஆண்டுகளில் இரண்டு கூட்டங்களில் சந்தித்து ஒரு கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தின்கீழ்ப் பணியைத் துவங்க சம்மதித்தனர்.

வியன்னா உடன்படிக்கை (மார்ச் 1985) மற்றும் மாண்ட்ரியல் ஒப்பந்தம் (செப்டம்பர் 1987) ஆகியவற்றிற்கிடையிலான காலத்தில் வியக்கத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. உலக அளவில்அறிவியலார்ஒன்றுகூடிமுக்கியமானவிஷயங்களில் ஒருமித்த கருத்தினை அடைந்தனர். அதேசமயம், ரோமில் நடைபெற்ற கூட்டங்களில் ஓசோன் படலத்தை சிதைக்கும் பொருட்களின் வெளியேற்றத்தைக் கணக்கிடவும், இதன் மீதான எதிர்கால நிலவரத்தைத் தெளிவுபடுத்தவும் மற்றும் கட்டுப்பாட்டிற்கான புதிய வேலை அணுகுமுறைகளை பெறுவதற்காகவும் விவாதங்கள் நிகழ்ந்தன.

செப்டம்பர் 1987ல் அபிப்பிராய பேதங்கள் மற்றும் புரிந்துகொள்ளாத நிலை ஆகியவை மறைந்து நம்பிக்கை உருவானது. இந்த நம்பிக்கையானது கட்டுப்பாட்டு முறைகளில் ஓர் ஒருமித்த கருத்து உருவாகக் காரணமாக இருந்தது. ஆக, செப்டம்பர் 16, 1987ல் ஓசோன் படலத்தைச் சிதைக்கும் பொருட்கள் மீதான மாண்ட்ரியல் ஒப்பந்தம் 24 நாடுகளால் கையெழுத்தானது. ஜனவரி 1, 1989ல் இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்துத் தரப்பினரும் முக்கிய CFCக்கள் மற்றும் ஹாலோன் வாயுக்களின் பயன்பாட்டை 1986 அளவுகளில் நிறுத்த இலக்குகளை நிர்ணயித்தனர். அத்துடன் பயனீட்டை 50%ஆக 10 ஆண்டுகளுக்குள் குறைக்கவும் இலக்கினை நிர்ணயித்தனர். அதிலிருந்து இந்த ஒப்பந்தம் 5 முறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. 1990 (லண்டன்), 1992 கோபன்ஹேகன்), 1995 (வியன்னா), 1997 (மாண்ட்ரியல்) மற்றும் 1999 (பீஜிங்). இந்த ஒப்பந்தம் பரவலாகவும் வெற்றிகரமாகவும் பின்பற்றப்படுவதால் இந்த மாண்ட்ரியல் ஒப்பந்தம் மிகச்சிறந்த சர்வதேச கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக பாராட்டப்படுகிறது. “இதுநாள் வரையில் மிகவும் வெற்றிகரமான ஒரே சர்வதேச ஒப்பந்தமாக மாண்ட்ரியல் ஒப்பந்தம் திகழ்கிறது” என்று கோஃபி ஆனன் கூறுகிறார். தற்போது, மாண்ட்ரியல் ஒப்பந்தத்தில் 191 நாடுகள் அங்கத்தினர்களாக உள்ளன. நவம்பர் 2006 வரை உறுப்பினர் ஆகாத நாடுகளில் அந்தோரா, ஈராக், சான்மாரினோ, டைமர்-லஸ்டே மற்றும் வாடிகன் நகரம் ஆகியவையும் உள்ளடங்கும்.

இந்த ஒப்பந்தம் சற்றே சிக்கலானது என்றாலும் இதன் மிகவும் முக்கியமான அம்சம் என்னவெனில் ஒப்பந்தத்தின் முதற்கட்டமாக குறிப்பிடப்பட்டதைத் தவிர, ஓசோனை சிதைக்கும் பொருட்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்மிக்க இதன் செயலாக்கம்தான். 1992ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் மாண்ட்ரியல் ஒப்பந்தத்தில் திருத்தியமைக்கப்பட்ட முக்கியமான வழிமுறைகளில் ஓசோனைச் சிதைக்கும் இதர பல்வேறு பொருட்களின் உபயோகத்தை நிறுத்தும் நடவடிக்கையும் முக்கியமானது. மேலும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட இந்தப் பட்டியலில் ஹைட்ரோகுளோரோஃப்ளூரோ கார்பன்ஸ், ஹைட்ரோப்ரோமோஃப்ளூரோகார்பன்ஸ் மற்றும்மெத்தில்ப்ரோமைட்ஆகியவையும் உள்ளடங்கும்.

**சாதனைகள்**

ODSஐ படிப்படியாக உபயோகிப்பதை நிறுவத்துவதற்கான பல வழிமுறைகளை ODSன் உபயோகத்தை நிறுத்துவதிலும், வளர்ந்துவரும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் நிதியுதவியையும் தொழில்நுட்ப ஆதரவையும்அளிப்பதிலும்மற்றும்வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் நாடுகள் ODSஐ படிப்படியாக நிறுத்துவதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதிலும் வலுவான பன்முகச் செயல்முறைகளை மேற்கொள்வதன் வழியாக இந்த ஒப்பந்தமானது 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட தயாரிப்பிலும் பயனீட்டிலும் ODSன் அளவை 90%க்கும் மேல் குறைத்துள்ளது. முழுவதுமாகப் பயனீட்டை குறைக்கும் இலக்குகளை அடைவதில் பல திட்ட ஆதரவு முறைகள், குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களை மனதில்கொண்டு ODSஐ படிப்படியாக நிறுத்துவதற்கும் ODS அற்ற உலகத்திற்கு இட்டுச் செல்லவும் வடிவமைக்கப்பட்டன. இந்த ஒப்பந்தமானது ODS உபயோக நிறுத்தம் சம்பந்தமாக தொழில்நுட்ப மற்றும் கொள்கைரீதியில் தெற்கு-தெற்கு கூட்டுறவினை மேம்படுத்தவும், ODS வர்த்தகத்தினை கண்காணிப்பதில் மண்டல அளவிலான கூட்டுறவினை மேற்கொள்ளவும் உதவுகிறது. இந்த இரண்டு முக்கியமான அம்சங்களும் இதர சர்வதேச சுற்றுச்சூழல் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதுமட்டுமின்றி, மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின்கீழான நடவடிக்கைகளை $CO_2$ வெளியேற்ற அளவுகளைக் கணிசமாகக் குறைத்துள்ளதை தொழில்நுட்ப மதிப்பீடுகள் வெளிப்படுத்தியுள்ளன.

